இந்த மொழி பெயரக்கப்பட்ட திட்டத் தகவல் பத்திரம் ( PDS) அதன் 30 செப்ரம்பர் 2015 திகதியிடப்பட்ட ஆங்கிலப் பத்திரத்தின் அடிப்படையிலானது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1

| | |
|---|---|
| திட்டப் பெயர் | மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 |
| திட்ட இலக்கம் | 47381-002 |
| நாடு | இலங்கை |
| திட்ட இயல்பு | அங்கீகரிக்கப்பட்டது |
| திட்டத்தின் வகை / உதவியின் முறைமை | கடன் |
| நிதி வழங்கும் மூலம் / தொகை | **கடன் 3267-SRI: மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - பகுதி 1**<br>சாதாரண மூலதன வளங்கள் US$ 76.00 மில்லியன்<br>**கடன் 3268-:SRI மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1**<br>ஆசிய அபிவிருத்தி நிதியம் US$ 74.00 மில்லியன் |
| மூலோபாய செயல் திட்டம் | சூழல் நிகழ்தகவுசார் வளர்ச்சி<br>பொருளாதார வளர்ச்சி உட்பட |
| மாற்றத்தின் உந்து விசைகள் | ஆட்சி முறை மற்றும் ஆற்றல் விருத்தி<br>அறிவுத் தீர்வுகள்<br>பங்காண்மைகள் |
| துறை / உப துறை | **விவசாயம், இயற்கை வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி –**<br>நீர்ப்பாசனம் - நீர் அடிப்படையிலான இயற்கை வளங்கள் முகாமைத்துவம் |
| பால்நிலை சமத்துவம் மற்றும் பிரதான பிரவாகப் படுத்தல் | பால் நிலை வகைகள் இல்லை |
| விபரம் | விவசாய வெளியீடுகள் மற்றும் வீட்டு வருமானங்கள் என்பவற்றிற்கு ஊறு விளைவித்துக் கொண்டிருக்கும் அருகலான வழங்கல்களை உடைய உலர் வலயத்திற்கு மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலிருக்கும் மேலதிக நீரினை விநியோகம் செய்வதற்காக ஆசிய அபிவிருததி வங்கி (ADB) மற்றும் இலங்கை அரசாங்கம் ஒன்று சேர்ந்து வேலை செய்து கொண்டிருக்கின்றன. வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், வட மேல் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் என்பவற்றை உள்ளடக்கி இருக்கும் அதன் உலர்வலயத்திற்கு நாட்டின் மிகப் பெரிய ஆற்றிலிருந்து நீர் கொண்டு செல்லும் பழைய ஒரு தசாப்த காலத்தை அடக்கிய நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவேற்ற மகாவலி நீர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் உதவிக் கொண்டிருக்கின்றது. இத் திட்டம் 260 கி.மீற்றர்களிற்கு மேலான புதிய, மேம்படுத்தப் பட்ட கால்வாய்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் வேறு நீர்ப்பாசன கட்டுமானங்களை அமைத்துக் கொண்டு இருக்கின்றது. |

| | |
|---|---|
| | அத்துடன் நீர் முகாமைத்துவம் மற்றும் வழங்கல் முறைகளை முன்னேற்றுவதற்கான ஆய்வுகளை நடைமுறைப் படுத்தவும் உதவிக் கொண்டிருக்கின்றது. கூடிய நீர்ப்பாசன நீர் வழங்குவதோடு இத் திட்டம் 350,000க்கு மேற்பட்ட மக்களிற்கு சுத்தமான குடிநீர் வழங்குவதன் மூலமாக நாட்பட்ட சிறுநீரக வியாதிகள் பரவலாக இருக்கும் இடங்களில் சமூக சுகாதாரம் முன்னேற்றமடைதல். இத் திட்டத்தின் நீண்ட கால நோக்கமானது வறுமை குறைப்பும் அதே வேளை பொருளாதார முன்னேற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பினை ஊக்குவித்தலாகும். |
| திட்ட அடிப்படைக் கோட்பாடு மற்றும் நாட்டு/பிராந்திய மூலோபாயத்துடனான இணைப்பு நிலை | இலங்கை அபரிதமான நீர் வளத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அவை நாடு பூராக சம நிலையில் பரந்திருக்கக் காணப்படவில்லை. உலர் வலயப் பிராந்தியம் (வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட) விவசாயத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் 70 வீதமான கிராமவாசிகள் உட்பட மொத்தமாக நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத் தட்ட மூன்றில் ஒரு பகுதி மக்களின் தாயகம் ஆகும். ஆனாலும் இவ் வலயம் ஒரு வருடத்தில் 1,500 மில்லி மீற்றர்களிற்குக் குறைவான மழை வீழ்ச்சியையே பெறுவதுடன் வரட்சிகள் பொதுவானதொன்றாக உள்ளதால் விவசாய உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. உள்ளூர் சமூகங்கள் இந்த நீர் அழுத்தத்தினை அநேக சிறிய ஓடை இணைப்பு முறைகளையும் இடம் மாற்றும் கால்வாய்களையும் மற்றும் நீர்ப் பாசன முறைகளையும் அமைத்ததன் மூலம் சமாளித்தனர். இவை ஒவ்வொரு வருடமும் தனி நெற்பயிர்ச் செய்கை செய்வதற்கு துணை நிரப்பு நீர்ப்பாசன வசதி வழங்குவதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கலிற்கான களஞ்சியப்படுத்தலிற்கும் போதுமானதாக இருந்தது. பல இடங்களில் சமூகங்கள் நிலத்தடி நீரைச் சார்ந்துள்ளனராயினும் அவற்றில் சில மாசடைந்ததாக இருந்து பல சந்தப்பங்களில் கடுமையான சிறுநீரக வியாதியை உண்டாக்கும் காரணியாக உள்ளது. வருடம் முழுவதும் நீர் வளத்தினைப் பெறுவதற்கு வழி இல்லாததால் பிராந்தியத்தில் விவசாயம் மற்றும் வியாபார உற்பத்திகள் பாதிக்கப்பட்டு சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் தடை ஏற்படுத்துகின்றது. அதன் விளைவாக சராசரி குடும்ப வருமானங்கள் நாட்டின் மற்றப் பகுதிளை விட 10% குறைவாக உள்ளது. மக்கள் தொகை வளர்ந்து வருவதாலும், காலநிலை மாற்றத்தால் பிராந்தியத்தின் மழை வீழ்ச்சி குறைவடைந்து வருவதாலும் இந்நிலை மேலும் மோசமடையும். |
| தாக்கம் | வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், வட மேல் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் விவசாய உற்பத்தி முன்னேற்றம் மற்றும் நிகழ் தகவு பொருளாதார வளர்ச்சி |

| திட்ட பிரதிபலன் | |
|---|---|
| பிரதிபலன் விபரம் | திட்டப் பிரதேசங்களில் விவசாயத்திற்கும் குடிநீர்த் தேவைகளிற்கும் தேவையான வளங்களிற்கான பாதுகாப்பான வழிகள் |
| பிரதிபலனை நோக்கிய முன்னேற்றம் | |

| அமுலாக்கல் முன்னேற்றம் | |
|---|---|
| திட்ட வெளிப்பாடுகள் விபரம் | 1. புதிய, முன்னேற்றமான நீர்ப் பாய்ச்சல் மற்றும் களஞ்சிய உட்கட்டுமானம் அமைக்கப்படல்.<br><br>2. நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் உற்பத்தித்திறன் முறைமைகள் முன்னேற்றம்.<br><br>3. நடைமுறையில் செயற்படும் பல்-ஒழுங்குமுறை முதலீட்டுத் திட்ட |

| | |
|---|---|
| | முகாமைத்துவம் |
| அமுலாக்கல் முன்னேற்றத்தின் நிலைமை (வெளிபபாடுகள், செயற்பாடுகள், மற்றும் பிரச்சனைகள்.) | |
| பூகோளவியல் அமைவிடம் | |

| **பாதுகாப்பு வகைகள்** | |
|---|---|
| சுற்றாடல் | A |
| தன்னிச்சையான மீள்குடியேற்றம் | B |
| ஆதிவாசிகள் | C |

| **சுற்றாடல் மற்றும் சமூகத் தன்மைகளின் சுருக்கம்** | |
|---|---|
| சுற்றாடல் தன்மைகள் | சுற்றாடலிற்காக: எலகெரா மேல் வாய்க்கால் திட்டம் A வகையானது. அதற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது; வட மேல் மாகாண வாய்க்கால் திட்டமும் A வகையானதுடன் அதற்கெனத் தனியான EIA யும் தயாரிக்கப்பட்டுள்ளது; மினிப்பே இடக்கரைக் கால்வாய் மறுசீரமைப்பபுத் திட்டம் B வகை என்பதுடன் அதற்கான ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு ஆய்வு ஒன்றும் தயாரிக்கப் பட்டுள்ளது. |
| தன்னிச்சையற்ற மீள் குடியேற்றம் | தன்னிச்சையற்ற மீள் குடியேற்றம்: முதல் பகுதி முதலீட்டுத் திட்டம் B வகையாவதுடன் அதற்கான மீள் குடியமர்த்தல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. A மீள் குடியேற்றச் சட்டகமும் முதலீட்டுத்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ளது |
| ஆதிவாசிகள் | |

| **பங்குதாரர் தொடர்பாடல், பங்களிப்பு மற்றும் ஆலோசனை** | |
|---|---|
| திட்ட வடிவமைப்பின் போது | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு(MMDE), திட்டம் செயற்படுத்தப்படும் மாகாணங்களில் உள்ள இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை, செயற்படுத்தப்படும் பிரதேசங்களிலிருக்கும் நீர்ப்பாசன நீரின் முடிவுப் பாவனையாளர்களாக உள்ள விவசாயிகள் மற்றும் பயன்பெறுநர்கள் மற்றும் சகல MFF இல் உள்ள திட்டம் மூலம் பாதிக்கப்பட்டதும் நீர் மற்றும் புதிய கால்வாய்கள் பொருத்தமாகச் செய்வதற்கு மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ள கிட்டத்தட்ட 194 குடும்பங்கள் ஆகியோர் இத்திட்டத்தின் முக்கிய பங்குதாரர்கள் ஆவர். திட்ட வடிவமைப்பிற்கு MMDE பொறுப்பாக இருக்கும். மீளக்குடியேற்றத் திட்டமிடல் பயிற்சியில் திட்டத்தினால் பாதிக்கப்படும் குடும்பங்களிடமிருந்து ஆலோசனைகள் பெறுவதன் மூலம் அவர்களது பங்களிப்பு உள்வாங்கப்படும். |
| திட்ட அமுலாக்கலின் போது | முக்கி பங்காளரான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, இலங்கை நீர்ப்பாசன மற்றும் மகாவலி அதிகார சபை திட்டத்தின் தொழில்நுட்ப வடிவமைப்பில் ஏற்கெனவே ஈடுபட்டு மக்கள் குடியிருப்புபளிற்கு ஏற்படும் பாதிப்புகளை மிகக் குறைந்த அளவில் இருக்கக் கூடியவாறும் மனிதர்கள் அத்துமீறி அபகரித்த யானைகளின் இயற்கையான இருப்பிடங்களைக் கூட்டுவதற்கும் தேவையான கவனமெடுத்துள்ளனர். திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மற்றும் ஒதுக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட அனைவரும் மீள் குடியேற்ற சட்டகம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டமிடல் பயிற்சி உருவமைத்தலிற்கு அமைய திட்ட வடிவமைப்பில் பங்களிப்பர். |

| **வியாபார வாய்ப்புகள்** | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | சகல ஆலோசனைச் சேவைகளும் ADB யின் வழிகாட்டிகளின் படி செயற்படுத்தப்படும். முன் ஒப்பந்தம் மற்றும் பின்கொணர் நிதியீட்டல் தெரிந்தெடுக்கும் உரிமை பாவிக்கப்படும்.. |
| கொள்வனவு | சகல கொள்வனவுச் செயற்பாடுகளும் ADB வழி காட்டிகளின் படி நடைபெறும். |
| பொறுப்பான ADB உத்தியோகத்தர் | லான்ஸ் கோர் |

| | |
|---|---|
| பொறுப்பான ADB திணைக்களம் | தெற்காசியத் திணைக்களம் |
| பொறுப்பான ADB பிரிவுகள் | சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் விவசாயப் பிரிவு, SARD |
| நிறைவேற்று முகவர்கள் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு<br>SECRETARY@ENVIRONMENTMIN.GOV.LK<br>82, சம்பத்பாயா, ராஜமல்வத்த வீதி, பததரமுல்ல, இலங்கை. |

| நேர அட்டவணை | |
|---|---|
| கருத்து ஆமோதித்தல் | - |
| உண்மை கண்டு பிடித்தல் | - |
| MRM | 13 மார்ச் 2015 |
| அங்கீகாரம் | 02 யூலை 2015 |
| இறுதி மீளாய்வுக் குழு | - |
| இறுதி PDS புதுப்பித்தல் | 08 செப்ரெம்பர் 2015 |

## கடன் 3267-SRI

| முக்கிய நிகழ்வுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| அங்கீகாரம் | ஒப்பமிடும் திகதி | செல்லுபடியாகும் திகதி | முடிவு | | |
| | | | மூலம் | திருத்தம் பெற்ற | உள்ள படி |
| 02 யூலை 2015 | - | - | 30 யூன் 2020 | - | - |

| நிதித்திட்டம் | | கடன் பாவனை | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (தொகை US$ | திகதி | ADB | மற்றையோர் | நிகர சத வீதம் |
| திட்டச் செலவு | 116.00 | திரண்ட ஒப்பந்தம் வழங்கல்கள் | | | |
| ADB | 76.00 | 02 யூலை 2015 | 0.00 | 0.00 | 0% |
| சரி நிரப்புக் கூறு | 40.00 | திரண்ட நிதிப் பகிர்வுகள் | | | |
| கூட்டு நிதியளிப்பு | 0.00 | 02 யூலை 2015 | 0.00 | 0.00 | 0% |

## கடன் 3268-SRI

| முக்கிய நிகழ்வுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| அங்கீகாரம் | ஒப்பமிடும் திகதி | செல்லுபடியாகும் திகதி | முடிவு | | |
| | | | மூலம் | திருத்தம் பெற்ற | உள்ள படி |
| 02 யூலை 2015 | - | - | 30 யூன் 2020 | - | - |

| நிதித்திட்டம் | | கடன் பாவனை | | | |
|---|---|---|---|---|---|
| | (மொத்தம் US$ மில்லியன்) | திகதி | ADB | மற்றையோர் | நிகர சத வீதம் |
| திட்டச் செலவு | 74.00 | திரண்ட ஒப்பந்த வழங்கல்கள் | | | |
| ADB | 74.00 | 02 Jul 2015 | 0.00 | 0.00 | 0% |
| சரி நிரப்புக் கூறு | 0.00 | திரண்ட ஒப்பந்த வழங்கல்கள் | | | |
| கூட்டு நிதியளிப்பு | 0.00 | 02 Jul 2015 | 0.00 | 0.00 | 0% |

திட்டத் தகவல் பத்திரங்கள் (PDS) திட்டத்தின் தகவல் அல்லது நிகழ்ச்சி நிரலின் சுருக்கமான தகவல்களை உள்ளடக்கியுள்ளது. PDS ஒரு முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் வேலையாகையால் சில தகவல்கள் ஆரம்ப பத்திரத்தில் உள்ளடக்கப் படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவை கிடைக்கப் பெறும்போது உள்ளடக்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதும் சுட்டிக்காட்டியானதும் ஆகும்

இத் திட்டத் தகவல் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல்களை எந்த வித உத்தரவாதமுமில்லாது அதனுடைய பாவனையாளரிற்கு ஒரு வளமாக மாத்திரம் ADB வழங்குகின்றது. ADB சிறந்த தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே வேளை, ''உள்ளது எதுவோ'' அதுவே ஒப்பு வகையிலோ அல்லது பொருள் படும் வகையிலோ, வணிகத்திற்கு, ஒரு தேவைக்கு பொருத்தமென்றோ, அல்லது மாறாக நடக்காது என்றோ எந்தவித மட்டுப்படுத்திய உத்தரவாதம் இல்லாது தகவல்கள் வழங்குகின்றது. ADB குறிப்பாக இவ்வாறான தகவல்களின் செம்மை அல்லது முழுமை பற்றிய பிரதிநிதித்துவங்களையோ அல்லது உத்தரவாதங்களையோ செய்யாது.